பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

31 12 2024 **TUESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிஎஸ்எல்வி சி - 60 ராக்கெட் மூலம் இரண்டு செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.
2. தொழில்நுட்பத்தின் உதவியுடன் பொதுமக்கள் குறைதீர்ப்பு நடைமுறைகளை மேம்படுத்த 270 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
3. சீரான கல்வி வளர்ச்சிக்கு அரசு மற்றும் தனியார் பள்ளிகளின் கூட்டுப் பங்களிப்பு அவசியம் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.
4. ஆங்கிலப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களையொட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.
5. தென்தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<<>>>>>**

பிஎஸ்எல்வி சி - 60 ராக்கெட் மூலம் இரண்டு செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து நேற்றிரவு **Spadex** இரட்டை செயற்கைக்கோள்களுடன் இந்த ராக்கெட் செலுத்தப்பட்டது.

*(சவுண்ட் - ராக்கெட் - 21 செகண்ட்ஸ்)*

இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையத்திற்கு உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்கான தொழில்நுட்பத்தை சோதிக்கும் வகையில் இந்த செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

விண்ணில் செலுத்தப்பட்ட 15 நிமிடங்களில் இது 476 கிலோமீட்டர் உயர சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

நாட்டில் பொதுமக்கள் குறைதீர்ப்பு செயல்முறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலன் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்தாண்டு பொதுமக்கள் குறைதீர்ப்பு நடைமுறைகள் தொடர்பான ஆண்டு இறுதி ஆய்வுக்கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அமைச்சர், மையப்படுத்தப்பட்ட பொதுமக்கள் குறைதீர்ப்பு நடைமுறையில் இந்த ஆண்டு 28 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் உதவியுடன் குறைதீர்ப்பு நடைமுறைகளை மேம்படுத்த மேலும் 270 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது குறைதீர்ப்புக்கான சராசரி கால அளவு 12 நாட்களாக குறைந்துள்ளது என்று அவர் தெரிவித்தர்.

வரும் ஆண்டில் இந்த நடைமுறைகள் மேலும் திறம்பட்ட வகையில் மேம்படுத்தப்படும் என்றும் திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

இக்கூட்டத்தில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், பல்வேறு மாநிலங்களின் அரசுத்துறைகள் உள்ளிட்டவற்றை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

சீரான கல்வி வளர்ச்சிக்கு அரசு மற்றும் தனியார் பள்ளிகளின் கூட்டுப் பங்களிப்பு அவசியம் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

சென்னையில் தனியார் பள்ளிகள் சங்கத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், தனியார் பள்ளிகள் நிர்வாகத்தினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வரும் கல்வியாண்டில் 500 அரசுப்பள்ளிகளை, தனியார் பள்ளிகள் தத்தெடுத்து வசதிகள் மேம்படுத்தப்படும் என தனியார் பள்ளிகள் சங்கம் அறிவித்துள்ளதாகவும், இது வரவேற்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார்.

தனியார் பள்ளிகள் பின்பற்றும் சிறந்த நடைமுறைகளை அரசுப்பள்ளிகளும், அரசுப்பள்ளிகள் பின்பற்றும் நடைமுறைகளை தனியார் பள்ளிகளும் பகிர்ந்துகொண்டு கல்வித்தரத்தை மேம்படுத்த வேண்டும் என்று திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

<<<<<<>>>>>

ஆங்கிலப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இன்று நள்ளிரவு நடைபெறுவதையொட்டி, தமிழகம் முழுவதும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் 90 ஆயிரம் காவல்துறையினரும், 10 ஆயிரம் ஊர்காவல் படையினரும் பாதுகாப்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக காவல்துறை கூறியுள்ளது.

சென்னையில் 19 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக மாநகர காவல்துறை கூறியுள்ளது.

நட்சத்திர விடுதிகளில் நள்ளிரவு ஒரு மணிக்குமேல் புத்தாண்டு நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது எனவும் காவல்துறை உத்தரவிட்டுள்ளது.

புத்தாண்டு கொண்டாட்டங்களையொட்டி சென்னையின் பல்வேறு இடங்களில் போக்குவரத்து மாற்றங்களையும் காவல்துறை அறிவித்துள்ளது.

சென்னை காமராஜர் சாலை போர் நினைவிடம் முதல், கலங்கரை விளக்கம் வரை இன்றிரவு எட்டு மணிமுதல், நாளை காலை ஆறு மணிவரை வாகன போக்குவரத்து தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தூய்மைப்பணியாளர்கள் நலனுக்காக மத்திய - மாநில அரசுகள் செயல்படுத்தும் திட்டங்களின் பலன்கள் அவர்களை முழுமையாக சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தூய்மைப்பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தலைவர் திரு வெங்கடேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பெரம்பலூரில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்திற்குப்பின் பேசிய அவர், தூய்மைப்பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே இந்த ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த பணியாளர்கள் தங்களது குறைகளை ஆணையத்திற்கு நேரடியாக தெரிவிக்கலாம் என்றும் திரு வெங்கடேசன் கூறினார்.

<<<<<<>>>>>

சென்னையில், சாலைகளில் மாடுகள் சுற்றித்திரிவதை தடுக்க மாநகராட்சி சார்பில் மண்டலத்துக்கு ஒரு மாட்டுத்தொழுவம் அமைக்கப்படும் என்று மேயர் திருமதி பிரியா அறிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற மாநகராட்சி கூட்டத்தில் பேசிய அவர், தொழுவத்தின் பராமரிப்பு மாநகராட்சி வசம் இருந்தாலும், பராமரிப்புக் கட்டணம் மாடுகளின் உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்றார்.

தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த இனக்கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்படும் என்றும் திருமதி பிரயா கூறினார்.

<<<<<<>>>>>

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை நேற்று மாலை தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவியை சந்தித்து பேசினார்.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பாக, அவர் ஆளுநரிடம் மனு அளித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேணடும் என்றும் ஆளுநரை, அவர் கேட்டுக்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, திரு அண்ணாமலை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மாணவி வன்கொடுமை தொடர்பாக சென்னை மாநகராட்சி கூட்டத்தில் திமுக-வை சேர்ந்த மாமன்ற உறுப்பினர் ஒருவர் தரக்குறைவாக பேசியிருப்பதாகவும், இது கண்டிக்கத்தக்கது என்றும் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இதனிடையே, திரு அண்ணாமலை வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில், காங்கேயம் காளை சிலையை காங்கேயம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தின் முன்பகுதியில் அமைக்க மாநில அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் மூன்றாண்டுகளாக கோரிக்கை வைத்தும் அரசு அனுமதி மறுத்துள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கேயத்தின் பாரம்பரிய அடையாளமான காங்கேயம் காளை சிலையை அங்கு வைக்காமல், வேறு எங்கு வைப்பது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜல்லிக்கட்டு காளை வளர்ப்பவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு இதுவரை நிறைவேற்றவில்லை என்றும் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<>>>>>

பிரயாக்ராஜில் நடைபெறவுள்ள கும்பமேளா விழாவையொட்டி, சென்னையிலிருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை சென்ட்ரலில் இருந்து கோம்தி நகருக்கு ஜனவரி 18, பிப்ரவரி 5, மார்ச் ஒன்று ஆகிய தேதிகளில் ரயில்கள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மேட்டுப்பாளையம் மற்றும் குன்னூரிலிருந்து, உதகமண்டலத்திற்கு ஜனவரி 16-ஆம் தேதி முதல், 19-ஆம் தேதிவரை சிறப்பு மலை ரயில் சேவை இயக்கப்படவுள்ளது.

இதற்கான முன்பதிவு இன்று தொடங்குவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 65 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்கொரியாவில் பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதை அடுத்து விமான நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பாக அவசர கால பாதுகாப்பு சோதனை நடத்த அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>

நடப்பு ஆண்டில் ரபி பருவத்தில் பயிர் விதைப்பு இதுவரை 614 லட்சம் ஹெக்டேரைத் தாண்டியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக புதுமைக் கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்ய 72 புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

தென்காசி மாவட்டம் கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் இருந்து இன்று முதல் மார்ச் 31-ம் தேதி வரை பாசனத்திற்குத் தண்ணீர் திறக்கப்படும் என மாநில நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் 614 மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறுவதற்கான வங்கி கணக்குப் பற்று அட்டைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

<<<<<<>>>>>

ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்களுக்கு ஜனவரி 10ஆம் தேதி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

கோவை மாவட்ட வனபகுதியில் தாயை பிரிந்த குட்டி யானை முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள வளர்ப்பு யானைகள் முகாமிற்கு அழைத்து வரப்பட்டது.

<<<<<<>>>>>

உதகமண்டலத்தில் கோடை சீசனில் போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்வது குறித்து போக்குவரத்துக் காவல்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

<<<<<<>>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆயிரத்து 363 பேருந்து நிறுத்தங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட தூய்மைப் பணிகளின் போது 38 மெட்ரிக் டன் திடக் கழிவுகள் அகற்றப்பட்டதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தென்தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழகத்தின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பல இடங்களில் அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவக்கூடும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>